# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

# TAMIL UNIVERSITY, THANJAVUR

## சேர்க்கை விவரக்குறிப்பேடு

## 2018-2019

ஆய்வியல் நிறைஞர் பட்டம் (M.Phil.,)
முதுநிலைப்பட்டம் (M.A., M.Sc.,)
முதுநிலைப்பட்டயம் (P.G. Diploma)
பட்டயம் (Diploma)
சான்றிதழ் (Certificate Course)

## உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

தொலைபேசி எண்:04362-226517, 226720, 227845
தொலைநகலி:04362-226159
தொலைவரி:வளர்தமிழ், இணையதளம்:www.tamiluniversity.ac.in
மின்னஞ்சல்:tamilpalkalai.pathi@gmail.com

தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்மொழி, பண்பாடு, வரலாறு, கலை, அறிவியல் ஆகியவற்றை ஆய்வு செய்யும் ஓர் உயராய்வு மையமாக விளங்குகின்ற வகையில் 1981ஆம் ஆண்டு செப்தம்பர்த் திங்கள் 15ஆம் நாள் தொடங்கப்பெற்றது. தஞ்சை-திருச்சி நெடுஞ்சாலையில் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் மாவட்ட ஆட்சியர் புதிய அலுலகத்திற்கு அருகில் இயற்கை வளம் சூழ்ந்த எழில் மிகு நிலப்பரப்பில் அமைந்துள்ளது. பல்கலைக்கழக நல்கைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்ற பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் விளங்கிவருகின்றது. இப்பல்கலைக்கழகத்தில் ஐந்து புலங்களில் இருபத்தாறு கல்வித்துறைகள் இயங்கி வருகின்றன.

## வசதிகள்

*தென்னிந்தியாவின் மிகப்பெரிய ஆய்வு நூலகம்

* சிறந்த கல்வியாளர்களால் பயிற்றுவிக்கப்படுதல்

* மாணவர்கள் பயன்படுத்த இணையதள வசதி

* வேலை வாய்ப்பு வழிகாட்டி மையம்

* மாணவர் குறைதீர்ப்பு மையம்

* இருபாலருக்கான தனித்தனி விடுதி வசதி

* பட்டியல்/பழங்குடி இனத்தவர்/பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான மத்திய, மாநில அரசுகளின் கல்வி உதவித்தொகை

* கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

* தமிழ்மொழியில் படிக்கும் மாணவர்களுக்கு அரசு விதிப்படி வேலைவாய்ப்பு

* பட்டப்படிப்புடன் கூடுதலாக பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் படிக்கும் வசதி

* நாட்டு நலப்பணித்திட்டம்

* கல்வியுடன் இணைந்த கல்விச்சுற்றுலா செல்லும் வசதி

* மத்திய/மாநிலப் பணித்தேர்வுகளை எழுதுவதற்கான பயிற்சி வகுப்புகள்

* பல்கலைக்கழக நல்கைக்குழுவால் வழங்கப்படும் தேசிய தகுதித்தேர்வு/மாநிலத் தகுதித்தேர்விற்கான இலவசப் பயிற்சி (NET/ SET/ CSiR/ ICHR)

* மாணவர்கள் படிக்கும் போதே பகுதிநேர வேலை வாய்ப்பு

## பல்கலைக்கழகம் அளிக்கும் கல்விநிலைப்படிப்புகள்

இளநிலை (Bachelor of Performing Arts – 4 Yrs)
முதுகலை (M.A)

முதுஅறிவியல் (M.Sc.)

இளங்கல்வியியல் மற்றும் கல்வியியல் நிறைஞர் (B.Ed/M.Ed)

ஆய்வியல் நிறைஞர் (M.Phil) முழுநேரம்

முனைவர்பட்டம் (Ph.D) ( முழுநேரம் / பகுதி நேரம் )

முதுநிலைப்பட்டயம் (Post Graduate Diploma)

பட்டயம் (Diploma)

சான்றிதழ் (Certificate)

## துறைகளும் மாணவர் சேர்க்கைக்கான கல்வித்தகுதிகளும்

| வ.எண் | துறை மற்றும் நடத்தப்படும் படிப்புகள் | சேர்க்கைக்கான கல்வித்தகுதிகள் | |
|---|---|---|---|
| | | முதுகலை (M.A.,)<br>முதுஅறிவியல் (M.Sc.,)<br>(தெரிவு அடிப்படை<br>மதிப்பீட்டு முறை-CBCS)<br>முழுநேரம்-இரண்டு<br>ஆண்டுகள்-4 பருவங்கள்) | ஆய்வியல் நிறைஞர்<br>முழுநேரம் (ஓர் ஆண்டு) |
| 01. | **சிற்பம்**<br>1.முதுகலை<br>2.ஆய்வியல் நிறைஞர் | ஏதேனும் ஓர் இளநிலைப்பட்டம்,<br>மாமல்லபுரம்/<br>கும்பகோணம்<br>கவின்கலைக் கல்லூரியின்<br>இளம் நுண்கலை மரபு<br>வண்ணவியல் (BFA)/ இளம் தொழில்நுட்ப<br>மரபுக்கட்டடக்கலை/<br>இளம் தொழில்நுட்ப மரபுச்சிற்பக்கலை | முதுகலை<br>வரலாறு |
| 02. | **இசை**<br>1.முதுகலை<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை இசை/நாட்டியம்<br>இளநிலைப்படிப்புடன் சங்கீத வித்வான்/<br>இசைக்கலைமணி/<br>மூன்றாண்டு இசைப்பள்ளிப்படிப்பு இவற்றில்<br>ஏதேனும் ஒன்றில் தேர்ச்சி | முதுகலை<br>இசை / நாட்டியம் |
| 03. | **நாடகம்**<br>1.முதுகலை $<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை-நாடகம்,<br>தமிழ், பிற பல்கலைக்கழகங்களில்<br>நாடகத்துறையில் வழங்கப்படும்<br>இளங்கலைப்பட்டம், புதுதில்லி தேசிய<br>நாடகப்பள்ளி வழங்கும் இளங்கலைப்பட்டம் | முதுகலை தமிழ் சிறப்பு நாடகத்திறன்,<br>அது குறித்த அனுபவ அறிவு |
| 04. | **ஓலைச்சுவடி**<br>1.முதுகலை $<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை தமிழ் | முதுகலை தமிழ் / வரலாறு |
| 05. | **அரியகையெழுத்துச்சுவடி**<br>1.முதுகலை<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை தமிழ் | முதுகலை தமிழ் |
| 06. | **கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்**<br>1.முதுகலை (வரலாறு மற்றும் தொல்லியல்)<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை வரலாறு / பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல்/தொல்லியல் | முதுகலை வரலாறு/வரலாறு மற்றும் தொல்லியல்/ கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் / பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் |
| 07. | **கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல்**<br>வரலாறு<br>1.முதுகலை<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை வரலாறு/ பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல்/தொல்லியல்/ அல்லது பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஓர் இளநிலைப்பட்டம் | முதுகலை வரலாறு/வரலாறு மற்றும் தொல்லியல்/ கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்/ பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் |
| 08. | **அயல்நாட்டுத்தமிழ்க் கல்வி**<br>1.முதுகலை $<br>2.ஆய்வியல் நிறைஞர் | ---- | முதுகலை<br>தமிழ் |

| | | | |
|---|---|---|---|
| 09. | மொழிபெயர்ப்பு<br>1.முதுகலை $<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை<br>மொழிபெயர்ப்பு / தமிழ் | முதுகலை மொழிபெயர்ப்பு /<br>தமிழ் / ஆங்கிலம் |
| 10. | அகராதியியல்<br>1.முதுகலை<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை தமிழ்/<br>3 ஆண்டுக்கான<br>இளம் புலவர் பட்டயம் | முதுகலை<br>தமிழ் |
| 11. | சமூக அறிவியல்<br>1.முதுகலை (சமூகப்பணி)<br>2.ஆய்வியல்நிறைஞர் | ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம் | முதுகலை<br>சமூகவியல் /சமூகப்பணி |
| 12. | அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சி<br>1.முதுகலை $<br>2.ஆய்வியல் நிறைஞர் | ---- | முதுகலை<br>தமிழ் |
| 13. | கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் | ---- | கல்வியியல் நிறைஞர் பட்டம் (M.Ed.,) |
| 14. | இலக்கியம்<br>1.முதுகலை<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை அல்லது<br>பி.லிட் தமிழ் / 3 ஆண்டுக்கான இளம்புலவர் பட்டயம் | முதுகலை தமிழ் |
| 15. | மொழியியல்<br>1.முதுகலை<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை மொழியியல்/<br>தமிழ்/பி.லிட்/3 ஆண்டுக்கான இளம் புலவர் பட்டயம் | முதுகலை மொழியியல்/<br>தமிழ் |
| 16. | தத்துவம்<br>1. கோயில் நிர்வாகவியல், $ சுற்றுலாவியல் மற்றும் தத்துவம் 2.யோகா<br>3.ஆய்வியல் நிறைஞர் | 1.2 ஏதேனும் ஓர்<br>இளநிலைப்பட்டம் | முதுகலை தத்துவம்/தமிழ்/<br>இந்தியப்பண்பாடு |
| 17. | பழங்குடி மக்கள் ஆய்வு<br>1.முதுகலை $<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை மானிடவியல் /<br>தமிழ்/உளவியல் | முதுகலை மானிடவியல்/ உளவியல் /தமிழ் |
| 18. | நாட்டுப்புறவியல்<br>1.முதுகலை<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை<br>நாட்டுப்புறவியல்/தமிழ் | முதுகலை<br>நாட்டுப்புறவியல் /தமிழ் |
| 19. | இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியம்<br>1.முதுகலை $<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளங்கலை இந்திய மொழிகள்/தமிழ்/<br>ஒப்பிலக்கியம் | முதுகலை இந்திய மொழிகள் / தமிழ் / ஒப்பிலக்கியம் |
| 20. | சித்த மருத்துவம்<br>1.முதுஅறிவியல்<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளம் அறிவியல்/உயிர் அறிவியல்/ விலங்கியல்/தாவரவியல்/ நுண்ணுயிரியல்/ உயிர்வேதியியல்/உயிர் தொழில்நுட்பவியல்/ மருந்தியல்/ சித்த மருத்துவம்/ஆங்கில மருத்துவம்/ மருந்தாக்கவியல் தொடர்புடைய பிற அறிவியல் பாடங்களில்<br>ஏதாவதொரு இளநிலைப்பட்டம் | முதுஅறிவியல்/ சித்த மருத்துவம்/ உயிர் அறிவியல்/ விலங்கியல்/ தாவரவியல்/ நுண்ணுயிரியல்/ உயிர் வேதியியல்/உயிர் தொழில் நுட்பவியல்/ மருந்தியல்/ ஆங்கில மருத்துவம்/ மருந்தாக்கவியல் தொடர்புடைய பிற அறிவியல் பாடங்களில் ஏதாவதொரு முதுநிலைப் பட்டம்<br>முதுநிலையில் உயிர்வேதியியல், மனோதத்துவம் |
| 21. | தொல் அறிவியல்<br>1. ஆய்வியல் நிறைஞர் $ | ---- | முது அறிவியல் (தாவரவியல் / கணிதம் ) பட்டம் |

| | | | |
|---|---|---|---|
| 22. | **தொழில் மற்றும் நில அறிவியல்** (நிலத்தியல்)<br>1.முதுஅறிவியல்<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளம் அறிவியல்<br>நிலத்தியல்/புவியியல் | முதுஅறிவியல் நிலத்தியல்/ புவியியல்/கடல் நிலத்தியல் பேரழிவுமேலாண்மை/பயன்பாட்டு நிலத்தியல்/நிலத்தியல் |
| 23. | **கட்டடக்கலை**<br>1.முதுகலை<br>2.ஆய்வியல்நிறைஞர் | ---- | ---- |
| 24. | **கணிப்பொறி அறிவியல்**<br>1.முதுஅறிவியல்<br>2.ஆய்வியல் நிறைஞர் | பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு இளம் அறிவியல் பட்டம்/ கணினி அறிவியல (B.Sc., Computer Science, B.C.A., B.Sc.,) | பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு முதுஅறிவியல்பட்டம்/ கணினி அறிவியல் (M.Sc., Computer Science, M.C.A., M.Sc.,) |
| 25. | **சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல்**<br>1.முதுஅறிவியல்<br>2.ஆய்வியல் நிறைஞர் | இளம் அறிவியல்-சுற்றுச்சூழல் அறிவியல்/ வேளாண்மை அறிவியல்/ மண்ணியல்/ நிலஅறிவியல் / உயிர் அறிவியல்/விலங்கியல்/ தாவரவியல்/ நுண்ணுயிரியல் /உயிர் வேதியியல்/வேதியியல் | முதுஅறிவியல்-சுற்றுச்சூழல் அறிவியல்/வேளாண்மை அறிவியல் /மண்ணியல் / நில அறிவியல்/ உயிர் அறிவியல் / விலங்கியல்/தாவரவியல்/ நுண்ணுயிரியல் / உயிர் வேதியியல் / வேதியியல்/உயிரி தொழில்நுட்பவியல்/மூலிகைஅறிவியல் |
| 26. | **நூலகம் மற்றும் தகவல்அறிவியல்**<br>1.ஆய்வியல் நிறைஞர் $ | - | முதுநிலைப் பட்டம் நூலக அறிவியல் (M.L.I.S) |

$- குறியிட்ட இத்துறைகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கையைப் பொறுத்து முதுகலை / முதுஅறிவியல் பாடங்கள் 2018-19 ஆம் கல்வி ஆண்டில் தொடங்கப்படும்.

## பிற தகுதிகள்

### இளநிலை (BPA)

# உயர்கல்வித்துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி 10+2 கல்விப் படிநிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

### முதுகலை/முதுஅறிவியல்

# உயர்கல்வித்துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி 10+2+3 கல்விப் படிநிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் படித்தவராக இருத்தல் வேண்டும்.

### ஆய்வியல் நிறைஞர்

# உயர் கல்வித்துறை மற்றும் பல்கலைக்கழக நல்கைக்குழு விதிகளின்படி 10+2+3+2 கல்விப் படிநிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் படித்தவராக இருத்தல் வேண்டும்.

# பட்டியல்/பழங்குடி வகுப்பினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் குறைந்தது 50% (விழுக்காடு) மதிப்பெண்கள் முதுநிலை பட்டப்படிப்பில் பெற்றிருத்தல் வேண்டும்.

(சான்றொப்பம் பெற்ற உரிய சாதிச்சான்றிதழ் இணைத்தல் வேண்டும்) பிற வகுப்பினருக்கு குறைந்தது 55% (விழுக்காடு) பெற்றிருக்கவேண்டும்.

# முதுநிலைப் பட்டப்படிப்பில் மூன்றாம் பருவத்தில் தேர்ச்சி பெற்று நான்காம் பருவம் தேர்வு எழுதி தேர்ச்சி முடிவுகளுக்குக் காத்திருக்கும் மாணவர்கள் விண்ணப்பம் செய்யலாம். ஒட்டு மொத்த தேர்ச்சி மதிப்பெண் பட்டியல் அளித்த பின்னரே சேர்க்கை உறுதி செய்யப்படும்.

# கலந்தாய்வு நடைபெறும் நாள், நேரம், இடம் ஆகியன தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு அந்தந்தத்துறைத்தலைவர்களால் நேரடியாகத் தெரிவிக்கப்படும். கலந்தாய்விற்கு வராதவர்களின் விண்ணப்பங்கள் சேர்க்கைக்குப் பரிசீலிக்கப்படமாட்டாது.

# தகுதியின் அடிப்படையிலும் தமிழக அரசு அறிவித்துள்ள இனவாரிச்சுழற்சி அடிப்படையிலும் மாணவர்கள் சேர்க்கை முடிவு செய்யப்படும். கலந்தாய்வில் பெற்ற மதிப்பெண்கள், இளநிலை/முதுநிலைப் படிப்புகளில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் துறையிலுள்ள இடங்களைப் பொறுத்து மாணவர் சேர்க்கை நடைபெறும்.

## முதுநிலைப்பட்டயம் (PG Diploma Courses)

| வ.எண் | துறை | பாடப்பிரிவு | தகுதி |
|---|---|---|---|
| 01. | சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் | சுற்றுச்சூழல் மேலாண்மை (Environmental Management) - ஓர் ஆண்டு, முழுநேரம் | ஏதேனும் இளநிலை அறிவியல் பட்டம் |
| 02. | சித்த மருத்துவம் | சித்த மருத்துவ தரநிர்ணயம்-ஓர்ஆண்டு, முழுநேரம் | ஏதேனும் இளநிலை அறிவியல் பட்டம்/வேதியியல்,உயிர் வேதியியல்/நுண்ணுயிரியல்/மருந்தியல்/உணவியல்/சித்த மருத்துவம் |
| 03. | தொழில் மற்றும் நில அறிவியல் | புவித்தகவல் அமைப்பு மற்றும் கடற்கரைச்சுற்றுச்சூழலியல் (Geographic information System and Coastal Eco System)-ஓர் ஆண்டு முழுநேரம் | முதுநிலை-அறிவியல், நிலஅறிவியல், உயிரியல், சுற்றுச்சூழலியல், புவியியல், கடலியல் |
| 04. | மொழிபெயர்ப்பு | மொழிபெயர்ப்பியல்-இரண்டு ஆண்டுகள், பகுதி நேரம் | ஏதாவது முதுகலை/முதுஅறிவியல் பட்டம் |

## பட்டயம் (Diploma Courses)- காலம்: ஓராண்டு

| வ.எண் | துறை | பாடப்பிரிவு | தகுதி |
|---|---|---|---|
| 01. | மெய்யியல் | 1.சைவசித்தாந்தம்<br>2.யோகா | +2தேர்ச்சி |
| 02. | கணிப்பொறி அறிவியல் | கணிப்பொறிப் பயன்பாடு | +2 தேர்ச்சி |
| 03. | இசை | இசை | +2 தேர்ச்சியுடன் இசையில் சான்றிதழ் |

## சான்றிதழ் (Certificate Courses) - காலம்: ஓராண்டு

| வ.எண் | துறை | பாடப்பிரிவு | தகுதி |
|---|---|---|---|
| 01. | இசை | இசை | 10/11-ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 02. | இந்திய மொழிகள் பள்ளி | தெலுங்கு | 10/11-ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 03. | கணிப்பொறி அறிவியல் | இணைய மொழிகள் | 10/11-ஆம் வகுப்பு தேர்ச்சி |

## விண்ணப்பங்கள்

மேற்குறிப்பிட்ட படிப்புகளுக்கான விண்ணப்பங்களைப் பெறக்கட்டணமாக ரூ.300/- செலுத்தி (ஆதிதிராவிடர் பழங்குடியின மாணவர்களுக்கு ரூ.150/-ம் சான்றொப்பமிடப்பட்ட சாதிச்சான்றிதழின் நகலும் தரவேண்டும்) தமிழ்ப் பல்கலைக்கழக அலுவலத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

அஞ்சல் வழியாக பெற விரும்புவோர் "பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், என்ற பெயரில் விண்ணப்பக் கட்டணமாக ரூ.300/-க்கான வங்கி வரைவோலையுடன் ரூ.50/-க்கான அஞ்சல்தலை ஒட்டிய தன்முகவரியிட்ட உறை இணைத்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள முகவரியான www.tamiluniversity.ac.in மூலம் விண்ணப்பங்களைப் படியிறக்கம் செய்து, விண்ணப்பக் கட்டணமாக ரூ.300/-க்குப் (ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களுக்கு ரூ.150/-ம் சான்றொப்பமிடப்பட்ட சாதிச்சான்றிதழின் நகலும் தரவேண்டும்) பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் என்ற பெயரிலான வங்கி வரைவோலையுடன் பல்கலைக்கழகத்திற்கு நிறைவு செய்த விண்ணப்பத்தினை அனுப்பிவைக்கலாம்.

## விண்ணப்பங்கள் நிறைவு செய்தல்

மேற்குறித்த படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் விண்ணப்பங்களைச் சரியாக நிறைவு செய்து குறிக்கப்பட்ட இறுதி நாட்களுக்கு முன்பாக பல்கலைக்கழக அலுவலகத்திற்கு நேரிலோ, அஞ்சல் வழியாகவோ வந்து சேருமாறு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிச் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், மாற்றுச்சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்கள் ஏதேனும் தேவையிருப்பின் அவற்றின் ஒளிப்பட நகலை சான்றொப்பம் இட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்தல் கூடாது.

## நுழைவுத்தேர்வு மற்றும் சேர்க்கை

பல்கலைக்கழக மான்யக்குழு விதிமுறைகள் அறிவிக்கை 2016இன்படி ஆய்வியல்நிறைஞர் மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பிற்குப் பல்கலைக்கழகத்தாரால் நுழைவுத்தேர்வு நடத்தப்பெறும். நுழைவுத்தேர்வு நடைபெறவுள்ள நாள், நேரம், இடம் ஆகியன தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களுக்குத் துறைத்தலைவர்களால் நேரடியாக அறிவிக்கப்பெறும். நுழைவுத்தேர்விற்கு வராதவர்களைத் தெரிவு செய்ய இயலாது. தகுதியின் அடிப்படையிலும் தமிழக அரசு அறிவித்துள்ள இனவாரிச் சுழற்சி முறை அடிப்படையிலும் மாணவர்கள் சேர்க்கை முடிவு செய்யப்பெறும். நுழைவுத்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இளநிலை/முதுநிலை படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் ஆகியவற்றின் அடிப்படையில் துறையிலுள்ள இடங்களைப் பொறுத்து மாணவர் சேர்க்கைக்குக் கருதப்பெறுவர்.

## இப்பல்கலைக்கழகத்தால் அங்கீரிக்கப்பட்ட கீழ்க்காணும் நிறுவனங்களில் அளிக்கப்படும் படிப்புகள்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் தொடர்பு முகவரி | தொலைபேசி எண்கள் | கல்விப்பாடங்கள் | வழங்கப்பெறும் பட்டம் |
|---|---|---|---|---|
| 01. | உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-600 113. | 044-22542992, 22542781 தொலைநகலி 22541436 | தமிழ் | 1. முதுகலை<br>2. ஆய்வியல் நிறைஞர்<br>3. முனைவர் பட்டம் |
| 02. | புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி 605 008 | 0413-225587, 2255817 | 1.மொழியியல்<br>2.மானிடவியல்<br>3.தமிழ்இலக்கியம்<br>4.நாட்டுப்புறவியல் | 1. ஆய்வியல் நிறைஞர்<br>2. முனைவர் பட்டம் |
| 03. | குன்றக்குடி ஆதினம் அறக்கட்டளைகல்வியியல் கல்லுாரி,குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம், 630 206 | 04577-264466 | கல்வியியல் | முனைவர் பட்டம் |
| 04. | கச்சியப்ப முனிவர் தமிழியல் கல்லுாரி, மனோன்மணியம் சாமிநாதப்பிள்ளை கல்வி அறநிலைய அறக்கட்டளை, உமையாள்புரம், செவ்வந்திலிங்கபுரம் 621 202. | 9842466090 | தமிழ் | 1. ஆய்வியல் நிறைஞர்<br>2. முனைவர் பட்டம் |
| 05. | தமிழிசைச்சங்கம் ராஜாஅண்ணாமலைமன்றம், எஸ்பிலனெட் சாலை, உயர்நீதி மன்றம் அருகில், சென்னை | 044-25341425, 25341958 | இசை, நடனம் | 1. ஆய்வியல் நிறைஞர்<br>2. முனைவர் பட்டம் |
| 06. | நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் கல்வி கலை பண்பாட்டு அறக்கட்டளை, கபிலர் நகர், வெண்ணாற்றாங்கரை, தஞ்சாவூர் | 04362-2252971 9443312981 | தமிழ் | 1. முதுகலை<br>2. ஆய்வியல் நிறைஞர் |
| 7. | திருச்சிராப்பள்ளி மறைமாவட்ட கல்விச் சங்கம், திருச்சிராப்பள்ளி | 9894550033 | இசை, பரதநாட்டியம் | 1. ஆய்வியல் நிறைஞர்<br>2. முனைவர் பட்டம் |
| 8. | பிரிட்ஜ் அகாடமி, நுண்கலை மற்றும் கல்வி அறக்கட்டளை, சென்னை | 044-23725111 9551222337 | இசை, பரதநாட்டியம் | 1. ஆய்வியல் நிறைஞர்<br>2. முனைவர் பட்டம் |
| 9. | தனிநாயக அடிகள் தமிழியல் நிறுவனம் திருச்சிராப்பள்ளி | 0431-2412833 9443072900 | தமிழ் | 1. ஆய்வியல் நிறைஞர்<br>2. முனைவர் பட்டம் |

இந்நிறுவனங்களில் சேர்ந்து படிக்க விரும்பும் மாணவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வரையறுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள கல்வித்தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## கல்விக்கட்டண விவரம்

### BPA படிப்புக்கான கல்விக்கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டதும் தெரிவிக்கப்படும்

| வ. எண் | கட்டண விவரம் | ஆய்வியல் நிறைஞர் | | முதுகலை (முழு நேரம்) | முதுஅறிவியல் (முழு நேரம்) | முதுநிலைப் பட்டயம் | பட்டயம் | சான்றிதழ் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிவியல் | கலை | | | | | |
| 01. | சேர்க்கைக் கட்டணம் | முழு நேரம் 5200 | முழு நேரம் 4200 | 3150 | 5150 | சித்தமருந்துகளின் தர நிர்ணயம்-5000 சுற்றுச்சூழல் மேலாண்மை-5000 புவித்தகவல் அமைப்பு மற்றும் கடற்கரைச்சுற்றுச் சூழலியல்-2000 மொழி பெயர்ப்பியல்-3000 | 1000 (செய்முறைப் பயிற்சி இருப்பின் கூடுதலாக-500) | 600 |
| 02. | தமிழகத்தின் பிறப்பல்கலைக் கழகத்பட்டங்களை ஏற்பதற்கான கட்டணம் | 200 | 200 | - | - | - | - | - |
| 03. | இந்தியவின் பிறமாநில பல்கலைக்கழகப்பட்டங்களை ஏற்பதற்கான கட்டணம் | 1000 | 1000 | 1000 | 1000 | - | - | - |
| 04. | வெளிநாட்டு பல்கலைக்கழகப் பட்டங்களை ஏற்பதற்கான கட்டணம் | 5000 | 5000 | 5000 | 5000 | - | - | - |
| 05. | ஆண்டுதோறும் செலுத்தும் கட்டணம் | | | - | - | - | - | - |
| 06. | தேர்வுக்கட்டணம் | 1400 | 1400 | 1400 | 1400 | - | - | - |
| 07. | 2-ஆம் பருவம் | - | - | 1000 | 1000 | - | - | - |
| 08. | 3-ஆம் பருவம் | - | - | 1850 | 1850 | - | - | - |
| 09. | 4-ஆம் பருவம் | - | - | 1000 | 1000 | - | - | - |
| 10. | ஆய்வுச்சுருக்க கட்டணம் | - | - | - | - | - | - | - |
| 11. | ஆய்வுநூல் கட்டணம் | 2000 | 2000 | | | | | |
| 12. | சேர்க்கைக் கட்டணத்தில் மீள வழங்கப்படும் கட்டணம் (காப்புறுதி கட்டணம்) | முழு நேரம் 1000 | முழு நேரம் 1000 | 500 | 500 | - | - | - |
| 13. | வெளிநாட்டு மாணவர்களுக்கான கட்டனம் | 15000 | 15000 | 10000 | 10000 | | | |

இக்கல்விக்கட்டணங்கள் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்விநிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கும் பொருந்தும்.

நிறைவுச்செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி

பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-613 010.

முதுகலை/முதுஅறிவியல் ஆகிய படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டிய இறுதி நாள்: 29.6.2018

ஆய்வியல் நிறைஞர் படிப்பிற்கான விண்ணப்பங்கள் அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டிய இறுதி நாள்: 29.6.2018

பதிவாளர்